**தலைப்பு 243 – அபிவிருத்தி நிதித் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2021 யூன் 16 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக் கூற்றுக்கள், அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை

தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக.

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் பிரயாணச் செலவினம் (வெளிநாட்டு) மீண்டெழும் செலவினம விடயத்தின் மற்றும் வாகனங்களை பழுதுபார்க்கும் மூலதன செலவினம விடயத்தின் கீழான ரூபா 900,000 ஆன மொத்த தேறிய நிதியேற்பாடும் செலவிடப்படாது எஞ்சியிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் பரவிய COVID-19 இன் உலகளாவிய தொற்றுநோய் காரணமாக வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படாததாலும், வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யாததாலும், வெளிநாட்டுப் பயணச் செலவுகளுக்கான மொத்த தேறிய ஒதுக்கீடும் எஞ்சியிருந்தது. திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்களுக்குத் தேவையான | உண்மையான தேவைகள் கருத்தில் மதிப்பீடுகளைத் தயாரிக்க வேண்டியதன் தேவைப்பாடு. |

| | | |
|---|---|---|
| | பழுதுபார்ப்புகளுக்கான கூறுவிலைகள் மீளாய்வாண்டில் அழைக்கப்பட்ட போதிலும், COVID – 19 உலகளாவிய தொற்றுநோய் காரணமாக பாகங்கள் இறக்குமதி செய்யப்படாததால் திட்டமிட்ட செயல்பாடுகளைச் செய்ய முடியவில்லை. | |

**2.2 முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்த்தல்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| அங்கத்துவ கடன் பதிவேட்டின் பிரகாரம் (CC10) உத்தியோகத்தரின் 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் ரூபா 246,373 ஆன போதிலும், தனிப்பட்ட கடன் பட்டியலுக்கு எடுக்கப்பட்டிருந்த கடன் மீதிகள் ரூபா 256,373 ஆனமையால் ஒட்டுமொத்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,000 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த பெண் உத்தியோகத்தர் 2020 திசெம்பர் மாதத்தில் விழா முன்பணமாக ரூபா 10,000 பெற்றுள்ளதாகவும் அந்தத் தொகை கடன் பேரேட்டில் மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும், CC10 ஆவணத்தில் உள்ள பிழையை சரி செய்யவும், எதிர்காலத்தில் இதுபோன்ற பிழைகளைத் தடுக்கவும் குறித்து வைத்துக்கொள்கின்றேன்.. | வழங்கப்பட்டும் முன்பணத்தை உரிய ஆவணங்களில் முறையாக பதிவு செய்ய வேண்டிய தேவைப்பாடு. |

**3. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக சிரேஷ்ட மட்டத்தின் | சிரேஷ்ட மட்டத்திலான உத்தியோகத்தர்களின் நியமன அதிகாரியான | பதவியணியில் நிலவும் வெற்றிடங்கள் திணைக்களத்தின் |

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 06 அல்லது 33 சதவீதம் வெற்றிடமாக காணப்பட்டது.

அரச சேவைகள் ஆணைக்குழுவினால் மாற்றீடொன்றை வழங்காது இந்த திணைக்களத்திலிருந்து வெளியே இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். எவ்வாறான போதிலும், நிலவும் வெற்றிடங்கள் தொடர்பில் கலாண்டு ரீதியாக அரச சேவைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. வெற்றிடத்தை நிரப்பும் வரையிலும், தற்போதுள்ள ஊழியர்களை இயலுமான அளவு உச்சமாக அளவில் அலுவலக பணிகளுக்கு பங்களித்தமையால் பதவியணி வெற்றிடங்கள் நிலவியமை திணைக்களத்தின் செயலாற்றலுக்கு பாதகமான முறையில் பாதிக்காத வகையில் செயற்பட இயலுமானதாக இருந்தது. குறித்த பிரிவுகளுக்கு மீண்டும் ஒரு தடைவ அறிவித்து விரைவாக இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு குறித்து வைத்துக்கொள்கின்றேன்.

செயலாற்றலுக்கு பாதகமான முறையில் தாக்கமளிக்கும் எனின் அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு அல்லது அவ்வாறல்லாத போது அந்த பதவியணியை திருத்துவதற்கும் உரிய நடவடிக்கை எடுப்பதன் தேவைப்பாடு.